04.07.17

தினமணி

# வறட்சி: காய்ந்துபோன 1.5 கோடி தென்னை மரங்கள்



கடும் வறட்சி காரணமாக கடந்த இரு ஆண்டுகளில் தமிழகத்தில் சுமார் 1.5 கோடி தென்னை மரங்கள் காய்ந்துவிட்டன. நீண்ட காலப்பயிரை இழந்து தவிக்கும் விவசாயிகளுக்கு ஒரு மரத்துக்கு ரூ.20,000 இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்தில் ஏறத்தாழ 4 கோடி தென்னை மரங்கள் உள்ளதாக 5 ஆண்டுகளுக்கு முன்பு அரசின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேல் நிலவும் கடுமையான வறட்சியின் காரணமாக, விளை நிலங்களில்

வாய்க்கால்களில் வளர்ந்திருந்த தென்னை மரங்கள் கூட காய்ந்துவிட்டன.

பெரும்பாலான இடங்களில் தென்னந்தோப்புகள் முழுமையாகக் காய்ந்துவிட்டன. கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்பு வரை வாய்க்கால்களில் விடும் அளவுக்கு கிணறுகளில் தண்ணீர் இருந்தது. அதன்பிறகு கிணறுகள் முற்றிலுமாகக் காய்ந்துவிட்டதால் தென்னை மரங்களும் காய்ந்துவிட்டன. சராசரியாக 40 முதல் 50 ஆண்டுகள் வரை பலன் தரக்கூடிய தென்னை மரங்களை வறட்சியால் இழந்துள்ள விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் எனக் கோரிக்கை எழுந்துள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்புச் செயலர் செ.நல்லசாமி தெரிவித்தது: இந்தியாவில் தேங்காய் உற்பத்தியைப் பொருத்தவரை தமிழகம் முதலிடத்தில் உள்ளது. இரண்டாவது, மூன்றாவது இடங்களில் கேரளம், கர்நாடக மாநிலங்கள் உள்ளன.

தேங்காய் விலை உயரும்: தமிழகத்தில் நீலகிரி மாவட்டம் நீங்கலாக பிற மாவட்டங்கள் அனைத்திலும் பரவலாக தென்னை மரங்கள் உள்ளன. குறிப்பாக பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தஞ்சாவூரில் பட்டுக்கோட்டை, முத்துப்பேட்டை, பேராவூரணி ஆகிய பகுதிகளில் தேங்காய் அதிகம் உற்பத்தியாகிறது. தென்னை விவசாயத்துக்கு தண்ணீர் அதிகம் தேவை. ஆனால், வறட்சி காரணமாக 1,000 அடி ஆழத்தில் உள்ள ஆழ்துளை கிணறுகளிலும் தற்போது தண்ணீர் இல்லை. குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள சூழலில் பரவலாக தென்னை மரங்கள் தண்ணீர் இன்றி காய்ந்து வருகின்றன. காவிரி கரையோரம் உள்ள நிலங்களிலும் தென்னை மரங்கள் காய்ந்து விட்டன. உயிருடன் உள்ள மரங்களிலும் காய்ப்பு இல்லை. ஆண்டுதோறும் ஜூன், ஜூலை மாதங்களில் தேங்காய் அறுவடை அதிகம் இருக்கும். ஆனால், நிகழாண்டு அறுவடை மிகவும்

குறைவான அளவுக்கே உள்ளது. எனவே, சமையலுக்குத் தேவையான தேங்காய்க்குத் தட்டுப்பாடு ஏற்படும். கோயில் வழிபாட்டுக்கான தேங்காய், இளநீர் கிடைக்காத நிலை ஏற்படும். இப்போது தேங்காய் ரூ. 20 முதல் ரூ. 30 வரை விற்பனையாகிறது. நிகழாண்டில் தேங்காய் விலை ரூ. 30 முதல் ரூ. 40 வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

மேலும், வறட்சியில் சிக்கி 50 சதவீத அளவுக்கு தென்னை மரங்கள் பட்டுப்போகக் கூடும். சுமார் 30 சதவீத மரங்களில் காய்ப்பு நின்றுவிடும் அபாயமும் உள்ளது. தென்னை என்பது நெல்லைப் போன்று 120 நாள்களில் நமக்கு பலனை அளிக்காது. குறைந்தது 5 ஆண்டுகள் கழித்துதான் அதன் பயன் கிடைக்கும். எனவே, தென்னை மரங்கள் பட்டுப்போகும்போது தமிழகம் தேங்காய் உற்பத் தியில் பின்னடைவை சந்திக்கும்.

வேலைஇழப்பு ஏற்படும்: தமிழகத்தில் தேங்காய் எண்ணெய் பிழியும் ஆலைகள் 300-அதிகமாக உள்ளன. அந்த ஆலைகள் அனைத்தையும் இன்னும் சில மாதங்களில் மூட வேண்டிய சூழல் ஏற்படும். 10,000-க்கும் மேற்பட்ட தேங்காய் உலர் களங்களையும் மூட வேண்டிவரும் என்பதால் ஆயிரக்கணக்கானோர் வேலை இழக்க நேரிடும்.

மரத்துக்கு ரூ. 20,000 நிவாரணம்: நெய்வேலி என்எல்சி நிறுவனம் உயர் அழுத்த மின்கோபுரம் அமைக்க இடையூறாக இருந்ததாக தென்னை மரங்களை அப்புறப்படுத்தியது. இதற்காக 10 ஆண்டுகளுக்கு முன்னர் ரூ.10,000 இழப்பீடு வழங்கியது. எனவே, தற்போது வறட்சியால் காய்ந்த தென்னை மரங்களுக்கு மரம் ஒன்றுக்கு ரூ. 20,000 நிவாரணம் வழங்க வேண்டும்.

இதற்காக கிராம அளவில் வருவாய், வேளாண்மை, விவசாயிகள் அடங்கிய குழுவை அமைத்து காய்ந்துபோன தென்னை மரங்கள் குறித்து கணக்கெடுக்க வேண்டும். இதுபோல் தோப்புகளில் காய்ந்துபோன தென்னை மரங்களை அப்புறப்படுத்தி நிலத்தை

சீரமைக்க ஏக்கருக்கு ரூ. 50,000 வழங்க வேண்டும் என்றார் அவர்.

ஆய்வு செய்ய குழு அமைக்கலாம்: காய்ந்துபோன தென்னை மரங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என கடந்த ஓராண்டுக்கும் மேலாக விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். விவசாயிகளின் கோரிக்கை அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என வேளாண்மை துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் கூறியதாவது: கிராம நிர்வாக அலுவலரின் வருவாய்க் கணக்குகளில் தென்னை மரங்கள் குறித்த கணக்கு இல்லை. இதனால், எந்த அடிப்படையில் அரசிடம் நிவாரணம் கோருவது என வருவாய்த் துறை அதிகாரிகள் கேள்வி எழுப்புகின்றனர். இதனால் அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் அடங்கிய குழு அமைத்து காய்ந்துபோன தென்னை மரங்களை கணக்கெடுத்து, எண்ணிக்கையில் 75 சதவீத மரங்களுக்கு இழப்பீடு வழங்கலாம் என அதிகாரிகள் சிலர் ஆலோசனை தெரிவித்துள்ளனர். அரசு எங்களின் ஆலோசனையைக் கேட்டால், இதைத் தெரிவிப்போம் என்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## விதைப்புக்கு தயங்கும் வெங்காய விவசாயிகள்

மழை இல்லாததாலும், சின்ன வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளதால் பேரையூர் பகுதியில் இரண்டு ஆண்டாக விதைப்பு பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு வெங்காயம் விளைச்சல் பாதிக்கப்பட்டு, விளைச்சல் குறைந்து. தற்போதைய நிலையில் விதை வெங்காயம் 100 ரூபாயாக இருப்பதால் வாங்குவதற்கும் விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர்.

தற்போதைய நிலையில், வெங்காயம் சாகுபடி செய்ய ஒரு ஏக்கருக்கு குறைந்தது 75 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். மழை பெய்யவில்லை என்றால் இதுவும் நஷ்டக்கணக்காகிவிடும் என்பதால் விவசாயிகள் விதைப்புக்கு தயங்கி வருகின்றனர்.

## தொடர் மழையால் காபி விவசாயிகள் மகிழ்ச்சி

ஏற்காட்டில், தொடர் மழை பெய்வதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஏற்காட்டில், கடந்த மூன்று நாட்களாக மாலை நேரத்தில், கன மழை இல்லாமல், மிதமான மழை பெய்தது. தற்போது, காபி பயிர்களில் பிஞ்சுகள் வரும் சமயம் என்பதால், இவ்வாறு பெய்யும் மிதமான மழையால், பழங்கள் அளவு அதிகரிக்கும். எனவே, அதிகளவிலான் காபி மகசூல் கிடைக்கும் என, விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## கோபியில் தேனீக்கள் வளர்ப்பு பயிற்சி

தேனீ வளர்ப்பு, தேன் மதிப்பு கூட்டுதல் குறித்த பயிற்சி, கோபி வேளாண் அறிவியல் நிலையத்தில், நேற்று நடந்தது. முதன்மை விஞ்ஞானி அழகேசன் தலைமை வகித்தார். பூச்சியியல் விஞ்ஞானி சீனிவாசன், முன்னோடி தொழில் முனைவோர் பார்த்தீபன் பயிற்சி அளித்தார். தேனீ வளர்ப்பு முறை, தேனை மதிப்பு கூட்டுதல் உள்ளிட்ட பயிற்சி அளிக்கப்பட்டது. ஈரோடு

மாவட்டம் மட்டுமின்றி, நாகை, நெல்லை, சேலம், நாமக்கல், திருச்சி மாவட்டங்களை சேர்ந்த, 42 விவசாயிகள் பங்கேற்றனர். தேன் பூச்சிகளுக்கு ஏற்படும் நோய்கள் மேலாண்மை மற்றும் தொழில் நுட்பம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

## விதை கிராம திட்டத்துக்கு ரூ.85 லட்சம் ஒதுக்கீடு

ஈரோடு மாவட்டத்தில், விதை கிராம திட்ட பயன்பாட்டுக்கு மானியமாக வழங்க, 85 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, வேளாண் இணை இயக்குனர் விஸ்வநாதன், உதவி இயக்குனர் ஜேம்ஸ் ஆகியோர் கூறியதாவது: நெல், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், தானியங்கள் போன்றவைகளின் சாகுபடி பரப்பு அதிகரித்தல், தரமான விதை உற்பத்தி செய்து வழங்குதல், விதை விரிவாக்கத்துக்காக, விதை கிராம திட்டம் செயல்படுகிறது. நடப்பாண்டு, இத்திட்டத்தில் விதைகளை உற்பத்தி செய்து, தரமான விதைகளை கொள்முதல் செய்து, மாவட்டம் முழுவதும் மானிய விலையில் வழங்க, 85 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. விதை உற்பத்திக்கும் குறைந்தபட்ச மானியம் வழங்கப்படும். இதன்படி, நெல் - 180 டன், பயறு வகை விதை - 24 டன், சிறு தானியங்கள் - 8 டன், எண்ணெய் வித்துக்கள் - 69 டன் என, தரமான உற்பத்தி விதைகளை வாங்கி, மானிய விலையில் விவசாயிகளுக்கு வினியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. விதை கிராம திட்டத்தின் கீழ் விதை உற்பத்தி செய்வதன் மூலம், அந்தந்த பகுதிக்கு ஏற்ற விதைகள் உற்பத்தி செய்யலாம். கலப்பு விதைகள் தவிர்க்கப்படும். விதை தட்டுப்பாடு இல்லாத நிலை ஏற்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## மழை பரப்பிய பசுமை; பந்தலூரில் குளுமை

பந்தலூர் பகுதியில் தொடர்ந்து மழை பெய்துவரும் நிலையில், வறட்சியின் பிடியில் சிக்கியிருந்த தேயிலை தோட்டங்கள் பசுமைக்கு மாறி வருகின்றன.

நீலகிரி மாவட்டம், பந்தலூர் பகுதியில் சிறு விவசாயிகள் மட்டுமின்றி, பெரிய தோட்ட நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன. கடந்தாண்டு பொய்த்து போன பருவமழையால், தேயிலைத்தோட்டங்கள் வறட்சியின் பிடியில் சிக்கி, தேயிலை செடிகள் கருகின.இந்நிலையில், கடந்த சில நாட்களாக, பந்தலூர் சுற்றுவட்டார பகுதிகளில் மழை பெய்து வருகிறது.இதனால், முக்கிய நீராதாரங்களில் தண்ணீர் வரத்து படிப்படியாக அதிகரித்துள்ளது. மேலும், காய்ந்து காணப்பட்ட தேயிலை தோட்டங்கள், மெல்ல, மெல்ல பசுமைக்கு மாறி வருகின்றன. பசுந்தேயிலை வரத்தும் அதிகரித்து வருவதால், தொழிற்சாலைகளில் கொள்முதலும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால், தற்போது, இரவு பகலாக தேயிலை உற்பத்தி நடக்கிறது.மறுபுறம், பசுமையாக மாறியுள்ள தேயிலைத்தோட்டங்கள் பார்வையாளர்களின் கண்களுக்கு இதமளிப்பதாக உள்ளது. மேலும், இந்த வழியாக வந்து செல்லும் சுற்றுலாப்பயணிகள், இப்பகுதியில் நின்று, "போட்டோ' எடுப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

## சீசன் முடிந்தும் வசீகரிக்கும் மலர்கள்

குன்னூர் சிம்ஸ்பூங்காவில் கோடை சீசன் நிறைவு பெற்றும் மலர்கள் பூத்துகுலுங்குவது சுற்றுலா பயணிகளை வசீகரிக்கிறது.

குன்னூர் பகுதிகளில் கோடை சீசன் நிறைவு பெற்று ஒரு மாத காலம் ஆகிய நிலையிலும், இதமான காலநிலை நிலவுகிறது. இந்நிலையில், குன்னூர் சிம்ஸ்பூங்காவில், மலர்கள் பெருமளவு பூத்து குலுங்குகின்றன. இதனால், இங்கு வரும் சுற்றுலா பயணிகள் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றனர். இதேபோல, லேம்ஸ்ராக், டால்பின்நோஸ் பகுதிகளில் உள்ள சுற்றுலா மையங்களிலும் சுற்றுலா பயணிகளின் கூட்டம் ஓரளவு காணப்படுகிறது.

## விவசாயிகள் மகிழ்ச்சி

போடி பகுதியில் பெய்த சாரல் மழையின் காரணமாக மானாவாரி விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தனர். வறண்டு கிடந்த கொட்டகுடி ஆற்றில் நீர்வரத்து துவங்கியது.

போடி பகுதியில் வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. மானாவாரி விவசாயிகள் விவசாய நிலங்களை உழுது மழையை எதிர்பார்த்த நிலையில் இருந்தனர். பலர் விதை, நாற்று பயிரிட்ட நிலையில் வானத்தை எதிர்பார்த்து காத்து கிடந்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல் வானம் மப்பும் மந்தாரமாகவும், மேகமூட்டத்தோடு காணப்பட்டன. போடி பகுதியில் நேற்று காலை முதல் பெய்த தொடர் சாரல் மழையால், வறண்டு கிடந்த பூமி குளிர்ச்சி அடைந்தது. மழைநீரை எதிர்பார்த்து கிடந்த விவசாயிகளுக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இதுபோல குரங்கணி மலைப்பகுதி, கேரள பகுதியில் பெய்து வரும் சாரல் மழையின் காரணமாக வறண்டு கிடந்த கொட்டகுடி ஆற்றில் நீர்வரத்து ஏற்பட்டது.

தினகரன்

## தக்காளி விலை உயர்வு

ஈரோடு தினசரி காய்கனி மார்க்கெட்டிற்கு தாளவாடி, கிருஷ்ணகிரி, காவேரிபட்டிணம் மற்றும் ஆந்திர மாநிலத்தில் இருந்து தக்காளி விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றது. கடந்த வாரம் வரை கிலோ அதிகபட்சம் ரூ.30க்கு விற்கப்பட்ட தக்காளி கடந்த நான்கு நாட்களில் கிடுகிடுவென உயர்ந்து நேற்று கிலோ ரூ.60க்கு விற்பனை செய்யப்பட்டது. வரத்து குறைவின் காரணமாக விலை உயர்ந்துள்ளதாகவும், இந்த விலை உயர்வு தொடர்ந்து நீடிக்கும் என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து தினசரி மார்க்கெட் தக்காளி வியாபாரி முத்துராஜ் கூறியதாவது: “தாளவாடி, காவேரிபட்டிணம், கிருஷ்ணகிரி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஈரோடு மார்க்கெட்டிற்கு தக்காளி வரத்து இருந்தது. ஆனால் தமிழகத்தில் மழை இல்லாததால் வறட்சியினால் தக்காளி வரத்து குறைந்துவிட்டதையடுத்து சமீபகாலமாக ஆந்திராவில் இருந்து மட்டும் தக்காளி வந்து கொண்டிருந்தது. தற்போது அங்கிருந்து வரும் தக்காளி வரத்தும் குறைய தொடங்கிவிட்டது. இதனால் தக்காளி விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு ஒரு பாக்ஸ் (43 கிலோ முதல் 45 கிலோ வரை ) ரூ.250 முதல் ரூ.300 வரை விற்பனையானது. ஆனால் இன்று (நேற்று) ரூ.500 முதல் ரூ. 600 வரை விற்பனை செய்யப்படுகின்றது. இதன்படி ஒரு கிலோ தக்காளி மார்க்கெட்டில்

ரூ.55க்கும், வெளியில் ரூ.60 வரையிலும் விற்பனையாகின்றது. வரத்து வரும் வரை இந்த விலை உயர்வு நீடிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு முத்துராஜ் கூறினார்.

## முள்ளங்கி அறுவடை தீவிரம்

தர்மபுரி அருகே முள்ளங்கி அறுவடை பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் தக்காளி, வெண்டை, கத்திரி, மிளகாய், முள்ளங்கி உள்ளிட்ட காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. இதேபோன்று பூக்கள், மரவள்ளி உள்ளிட்டவையும் அதிகமாக சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது, மாவட்டம் முழுவதும் முள்ளங்கி, தக்காளி, கத்திரி உள்ளிட்ட காய்கறிகள் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டு, விலை உயர்ந்துள்ளது.

அன்னசாகரம் பகுதியில் முள்ளங்கி அறுவடை செய்யும் பணி தற்போது தீவிரமாக நடக்கிறது. தோட்டத்தில் உள்ள முள்ளங்கியை விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் அறுவடை செய்து தொட்டி அமைத்து, அதில் முள்ளங்கிகளை கழுவி சுத்தம் செய்து மூட்டைகளாக கட்டி விற்பனைக்காக அனுப்பும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், 'தர்மபுரி மாவட்டத்தில் 600 ஏக்கருக்கு மேல் முள்ளங்கி சாகுபடி செய்யப்படுகிறது.

இந்தாண்டு கடும் வறட்சியினால் முள்ளங்கி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. அறுவடை செய்யப்படும் முள்ளங்கி, சேலம், ஈரோடு, கோவை, சென்னைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த வாரம் அதிகபட்சமாக கிலோ 22 வரை

முள்ளங்கி விற்பனையானது. தற்போது அறுவடை தொடங்கியுள்ளதால், ேநற்று ₹18 க்கு விற்பனை செய்யப்பப்பட்டது,’என்றனர்.